சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்
**OS.No. 232 / 2022**

வா.சா.1. சக்திவேல் 18.03.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பொறுப்புக்காக எழுதிக் கொடுத்துள்ளதன் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் செய்து கொடுத்த சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. நான் கிரையம் செய்து கொடுத்த சொத்தின் சர்வே எண்.161/1பி என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு செண்ட் என்று எனக்கு தெரியுமா என்றால் 3 1/2 செண்ட். சதுரடி 1267 1/4 சதுர அடி என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் மோல்டு வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்குண்டான பட்டா தற்போது இந்த 1-ம் பிரதிவாதி பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். அதேபோன்று இந்த வீட்டிற்கான வீட்டு வரி ரசீது, குடிநீர் ரசீது, மின்கட்டண ரசீது அனைத்தும் 1-ம் பிரதிவாதி பெயரில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது பெயரில் தான் இருந்து வருகிறது. 2018க்கு பின்னிட்டு எனது பெயரில் வீட்டு வரி ரசீது, குடிநீர் கட்டண ரசீது, மின்கட்டண ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வீட்டு வரி ரசீது மற்றும் குடிநீர் ரசீது என்னிடம் உள்ளது, நான் தாக்கல் செய்துள்ளேன். மின்கட்டண ரசீது இல்லை. நான் அதுபோன்று எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றும் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி உள்ளூர்காரர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் தாவா சொத்தை கிரையம்செய்து கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். ஆனால் நான் பொறுப்புக்காக எழுதிக் கொடுத்தேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். எனது வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கடன் பொறுப்புக்காக தான் கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்ததாக வாசகம் உண்டா என்றால் இல்லை. உண்மையிலேயே நான் கடன் பொறுப்புக்காக கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தால் கடன் பொறுப்புக்காக தான் அந்த கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்ததாக வாசகம் கண்டு இருக்கும் என்றும் அவ்வாறு எழுதிக் கொடுக்காததால் அந்த வாசகம் வா.சா.ஆ,1 கிரைய பத்திரத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை அனுபவித்து வரக்கூடிய வருவாய்துறை ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். அதுபோன்ற ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றும் நான் வழக்கிற்காக அதுபோன்ற ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் டீ கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். எனது பிராதிலும் நான் டீ கடை வைத்து

தான் தொழில் செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வேறு எந்த தொழிலும் செய்வதாக பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வண்டி வாகனங்களை வைத்து தொழில் செய்து வருவதாகவும் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் பாரா 5-ல் தொழில் மேம்பாட்டிற்காக 3 இலட்சம் 1-ம் பிரதிவாதியிடம் கடன் பெற்றதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு லெட்சுமி விலாஸ் வங்கியில் தாவா சொத்தின் பேரில் கடன் பெற்றிருந்தேன் என்றால் சரியல்ல. நான் கடன் வாங்கியிருந்தேன் என்றும் அந்த கடனை அடைக்க முடியவில்லை என்றும் அதனால் தான் உரிய மறுபயன் பேரில் 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த விபரம் நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என்பதால் தான் நான் வேண்டுமென்றே பிராதில் சொல்லாமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடன் வாங்கியிருந்தேன் என்றும் அந்த சங்கதிகளை பிராதில் குறிப்பிட்டால் எனக்கு பாதகமாகிவிடும் என்பதால் நான் பிராதில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த கிரைய தொகை 4,50,000 என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் முதல் தவணையாக 2,50,000 கிரையம் செய்த நாள் அன்று 2,00,000மும் வாங்கிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு வாங்கிவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் பணப்பற்று விபரத்தில் கிரையத்திற்கு முன்பு 2,50,000 மும் கிரைய தேதியில் 2,00,000 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதியிடம் முதலில் வாங்கிய தொகையை வைத்து வங்கி கடனை அடைத்துவிட்டு அதற்கு பின்பு தான் 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 467 சதுரடியில் தான் வீடு கட்டப்பட்டுள்ளது என்றால் அந்த அளவுகள் எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த கிரைய ஆவணத்தில் 467 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 467 சதுரடியில் 2011ம் ஆண்டு வீடுகட்டுவதற்கு 30 இலட்சம் செலவு ஆனதாக எனது பிராதில் குறிப்பிட்டுள்ளவை தவறு என்று சொன்னால் சரியல்ல. வீடு கட்டுவதற்கு 30 இலட்சம் செலவு ஆனது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1-ம் பிரதிவாதிக்கு எனது ஊரில் விவசாய நிலம் உள்ளது என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதி தனது குடும்பத்தாருடன் தோட்டத்து சாளையில் வசித்து வந்தார் என்றால் சரிதான். 1-ம் பிரதிவாதிக்கு ஊருக்குள் குடியிருக்க வீடு இல்லை என்றும் ஊருக்குள் வீடு வேண்டும் என்பதற்காக வீடு பார்த்து வந்த நிலையில் அப்போது நான் வீடு விற்பதாக சொன்னதன் போல் என்னிடம் உரிய மறுபயன் பேரில் 1-ம் பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. இந்த கிரையத்திற்கு பின்னிட்டு தாவா சொத்து 1-ம் பிரதிவாதி அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டு நான் தான் தாவா

சொத்தை அனுபவித்து வருகிறேன் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2018-க்கு பின்பு தாவா சொத்து1-ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வருவதால் தான் வருவாய்துறை ஆவணங்களிலும் ஊராட்சி ஆவணங்களிலும் 1-ம் பிரதிவாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது பிராதின் பாரா 6-ல் கொரோனா பரவல் காரணமாக தொழில் முடங்கிவிட்டதாகவும் அதனால் 1-ம் பிரதிவாதியிடம் பெற்ற கடனுக்கு வட்டி செலுத்த முடியவில்லை என்றும் 1-ம் பிரதிவாதி வட்டி தொகையை உடனே செலுத்துமாறு நெருக்கடி செய்தார் என்ற சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி வட்டி தொகை கேட்டு மிரட்டியதாக சொல்லும் நான் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எதனால் புகார் கொடுக்கவில்லை என்றால் தேவையில்லை என்பதால் கொடுக்கவில்லை. 1-ம் பிரதிவாதி எந்தவொரு வட்டி தொகையை கேட்டு மிரட்ட வில்லை என்றும் வழக்கிற்காக 1-ம் பிரதிவாதி மிரட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே 1-ம் பிரதிவாதி பணம் கேட்டு நெருக்கடி கொடுத்திருந்தால் நான காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றும் அவ்வாறு நெருக்கடி கொடுக்காத காரணத்தினால் தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றும் 1-ம் பிரதிவாதி என்னை மிரட்டவும் இல்லை என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளாக மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியரை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அவர்களுக்கு எதிராக பரிகாரம் எதையும் கோரியுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். அவ்வாறு எந்த பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளை பொறுத்து எந்தவித பரிகாரம் கோராத நிலையில் அவர்களை தரப்பினராக சேர்த்துள்ளது தேவையற்ற தரப்பினர்களை சேர்த்த தோசத்திற்கு இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிராதில் உள்ள விபரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். எனது வழக்கறிஞரை கேட்டால் தான் தெரியும். நான் விளம்புகை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரச்சனை இருந்தால் விளம்புகை பரிகாரம் கோரி தான் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் ஆவணத்தை ரத்து செய்ய கோரியும் பரிகாரம் கேட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 12.03.2018க்கு பிறகு தாவா சொத்து 1-ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அதனால் நான் பிராதில் சொல்லியுள்ள படி 01.05.2020ம் தேதி தாவா சொத்தை 1-ம் பிரதிவாதி கைப்பற்ற முயற்சி செய்தார் என்று சொல்லியுள்ள சங்கதி பொய் என்றால் சரியல்ல. 12.03.2018ம் தேதி 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையம் முறையாக

மறுபயனுக்காக தான் எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்றும் தற்போது அதை நான் கேள்விகேட்க எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 12.03.2018ம் தேதிக்கு பிறகு தாவா சொத்தை 1-ம் பிரதிவாதி சுவாதீனத்தை எடுத்துக்கொண்டு தற்போது வரை 1-ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இன்று வரை 1-ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி பெண் என்பதால் அவரை பயமுறுத்தி அவரிடம் இருந்து பணம் பரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எவ்வித வழக்குமூலமும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த தாவா 1-ம் பிரதிவாதியின் அதிகப்படியான செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.03.19 10:17:30 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்